ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE


මගේ අංකය / எனது இல. / My No. EPLG/AM/A/PS/SM/05/22/12 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 2023 மே 22


சம்மாந்துறை பிரதேச சபை
24 MAY 2023
SAMMANTHURAI PRADESHIYA SABHA


செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.

சம்மாந்துறை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

மேற்குறித்த அறிக்கையின் வரைவு இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது.

02. மேற்குறித்த வரைவு, பிழையான அல்லது ஆட்சேபனைக்குரிய அல்லது பொதுநலனுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய ஏதாவது விடயத்தைக் கொண்டிருக்கின்றதா என்பதை இக் கடிதம் கிடைத்து 07 நாட்களுக்குள் எனக்கு அறியத்தரவும்.

03. மேற்குறிப்பிட்டவாறு ஏழு நாட்களுக்குள் உங்களிடமிருந்து எதுவித பதிலும் கிடைக்காவிடின், இந்த வரைவு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வு இறுதி அறிக்கை தயாரிக்கப்படும் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன்.

M.P.I.M. ரஸ்மி
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

எனது இல: EPLG/AM/A/PS/SM/05/22/12

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.

**வரைவு**

**(அந்தரங்கமானது)**

சம்மாந்துறை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சம்மாந்துறை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவுக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 172(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளன. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் இவ் அறிக்கையின் கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியிலுள்ள அவதானிப்புக்களுக்கு நீங்கள் வழங்குகின்ற பதில்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்படும்.

## 1.2 கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 4,330,840 தொகை கிழக்கு மாகாண சபையிடமிருந்து பெறவேண்டிய மீளளிப்புத் தொகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான வைப்பு ரூபா 29,500,000 தொகை நிதிக்கூற்றில் கையிருப்புக் காசாக நடைமுறைச் சொத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பனம் ரூபா 6,408,721 தொகை நிதிக்கூற்றுக்களில் அரசிறைக் கடனாளியாக முன்கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையினால் கடந்த காலங்களுக்காக மீளாய்வாண்டில் காசாக பெற்றுக் கொண்ட முத்திரைக்கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் முறையே ரூபா 6,465,803 மற்றும் ரூபா 10,696,352 தொகைகளினை மீளாய்வாண்டிற்கான உண்டியல் வருமானமாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள நுகர்வு, மின்சார மற்றும் எழுதுகருவி பொருட்களின் கையிருப்பு ரூபா 838,224 தொகை நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையினால் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்காக செலுத்தவேண்டிய தொலைபேசி மற்றும் நீர்க்கட்டணம் உள்ளடங்கலாக மொத்தம் ரூபா 63,645 தொகை நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக தனியார் தொலைத் தொடர்பு சேவை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய தொலைத்தொடர்பு கோபுரக் கட்டணம் ரூபா 35,400 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சபையினால் மீளாய்வாண்டில் அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு செலுத்தவேண்டிய திண்மக்கழிவகற்றல் இடமாற்று நிலையக்கட்டணம் ரூபா 66,081 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டில் அழிக்கப்பட்ட புத்தகங்களின் கிரயம் ரூபா 14,033 தொகை புத்தகத்தின் கிரயத்திலிருந்து கழிக்கப்பட்டு நிதிக்கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டணம் கணிப்பிடப்பட்டு அத்தொகை நிதிக்கூற்றுக்களில் அரசிறைக் கடனாளியாக முன்கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டில் ஏலவிற்பனை செய்யப்பட்ட கணினி, இயந்திரங்கள் மற்றும் பொறித் தொகுதிகள் உள்ளடங்கலாக 30 பொருட்களின் கிரயப் பெறுமதிகளினை சொத்துக்களிலிருந்து கழித்துக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டில் உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த தொலைக்காட்சிப் பெட்டியின் பெறுமதி ரூபா 282,659 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஃ) காசுப்பாய்ச்சல் கூற்றில் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த அலுவலக உபகரணத்தின் பெறுமதி ரூபா 191,300 தொகையால் குறைத்து காட்டப்பட்டிருந்த அதேவேளை ஏனைய பொதுப்பயன்பாட்டு மூலதனச் செலவின் கீழ் இத்தொகை கூட்டி காட்டப்பட்டிருந்தது.

(க) மீளாய்வாண்டின் இறுதியில் சபையின் விற்பனை நிலையத்தில் காணப்பட்ட ரூபா 408,500 பெறுமதியான கூட்டுப்பசளை இருப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(கா) மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் மூலதனச் சொத்துக்களை பழுதுபார்த்தலும், பேணுதலுக்காக ஏற்பட்ட செலவில் ரூபா 173,000 தொகை குறைத்து ஏனைய பொதுப்பயன்பாட்டு மூலதனச் செலவுகளில் கூட்டிக்காட்டப்பட்டிருந்தன.

(கி) 07 விடயங்களில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் பேரேட்டின் பிரகாரம் மீதிகளுக்கிடையே ரூபா 10,148,738 தொகையான வேறுபாடொன்று இருந்தது.

(கீ) 2021 மற்றும் 2019 ஆம் ஆண்டில் பூர்த்தியாக்கப்பட்ட ரூபா 7,142,127 தொகையான 07 நிர்மாணங்களின் பெறுமதிகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) 2013 ஆம் ஆண்டில் சமுதாய அடிப்படையில் சங்கமொன்றின் எல்லைச் சுவரொன்றை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 140,902 தொகை மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(கூ) முன்னைய ஆண்டில் பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 4,820,400 தொகை நிதிக்கூற்றுக்களில் அரசிறைக் கடனாளியாக முன்கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைத் தரப்பினர்களின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தமது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படுத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்துக்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றன.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகப் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட 1.2(கீ),(கு),(கூ) சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 இணக்கமின்மைகள்

### 1.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | பெறுமதி (ரூபா) | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | |
| (i) 134 பிரிவு | - | அதிகார எல்லையினுள் அமைந்துள்ள வருமான மூலங்களை இணங்கண்டு கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 136 பிரிவு | - | சபையின் அதிகாரப் பிரிவிலுள்ள அரசிற்கு சொந்தமான நிறுவனங்களின் கட்டிடங்கள் மற்றும் காணிகளினை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி வீதவரி அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 143 பிரிவு | - | பிரதேச சபையின் அதிகாரப் பிரிவிற்குட்பட்ட காணிகள் மற்றும் கட்டிடங்களினை ஒவ்வொரு ஐந்து வருடத்திற்கு ஒருமுறை மதிப்பிடப்பட்டு வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதிகள் இலக்கம் 5(12) விதி | - | காசு, களஞ்சிய பொருள் முதலியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ள 03 உத்தியோகத்தர்களிடமிருந்து போதுமான பிணைப்பணங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 571(2) | 9,618,350 | வைப்புக்கள் இயன்றவரையில் பின்னர் மீளப் பெறுகை விண்ணப்பங்களைத் தவிர்ப்பதற்காக அரசிறைக்கு மாற்றப்படுவதற்கு முன்னராக ஆராய்ந்து விசாரணை செய்யவேண்டியிருந்த போதிலும், சபையினால் இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த 148 வைப்புக்களை விசாரணையின்றி வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தன. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானங்களை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 14,974,592 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 23,642,420 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

சபையின் பாதீடப்பட்ட வருமானங்கள் அறவிடுவதிலுள்ள வினைத்திறனின்மை மற்றும் செலவுகளின் சிக்கனமற்ற தன்மையின் காரணமாக மீளாய்வாண்டில் மீண்டுவரும் வருமானத்திலும் பார்க்க மீண்டுவரும் செலவீனம் ரூபா 14,924,592 தொகையினால் அதிகரித்துக் காணப்பட்டிருந்தது. மேலும், குறித்த ஆண்டில் காசாக உழைக்கப்பட்ட வருமானத்தினை விட காசாக செலுத்தப்பட்ட செலவீனம் ரூபா 20,117,850 தொகையால் அதிகரித்துக் காணப்பட்டமையினால் இச் செலவீனத்தை கொடுத்துத் தீர்ப்பதற்கு சபையானது கடந்த ஆண்டுகளில் சேமித்து வைத்திருந்த காசு கையிருப்பு மீதி ரூபா 20,358,700 தொகையினை பயன்படுத்தியிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் காசு கையிருப்பு மீதியாக ரூபா 240,851 தொகை மாத்திரம் காணப்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பாக தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 7,348,748 | 32,474,661 | 9,041,949 | 23,432,712 | 10,610,000 | 26,253,226 | 3,253,226 | 22,883,530 |
| (ii) | வாடகை | 32,408,746 | 39,182,350 | 31,536,857 | 7,645,492 | 32,067,746 | 35,894,941 | 25,540,605 | 10,354,335 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 3,080,000 | 1,941,350 | 1,941,350 | - | 2,050,000 | 1,750,350 | 1,750,350 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 13,706,000 | 3,770,315 | 3,770,315 | - | 14,459,000 | 8,311,463 | 8,311,463 | - |
| | கூட்டுத் தொகை | 56,543,494 | 77,368,676 | 46,290,471 | 31,078,204 | 59,186,746 | 72,209,980 | 38,855,644 | 33,237,865 |

### (அ) வீதவரியும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வீதவரி நிலுவை ரூபா 23,432,712 தொகையாக இருந்தது. இத் தொகை முன்னைய ஆண்டின் நிலுவைகள் அறவிடப்படாது காணப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 549,182 தொகையால் நிலுவை அதிகரித்துக் காணப்பட்டது.

(ii) சபையினால் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் வீதவரி அறவிடுவதற்கு மதிப்பிடப்பட்ட மனைகள், கடைகள் மற்றும் ஏனைய ஆதனங்கள் தொடர்பில் ஆராய்ந்து சபையின் அதிகார எல்லையினுள் காணப்படும் வீதவரி அறவிடப்படும் ஆதனங்களின் உண்மையான எண்ணிக்கையினை பெற்றுக்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் அறவிடப்பட்ட வருமானத்திற்குமிடையே ரூபா 11,797,848 தொகையான வேறுபாடுகள் காணப்பட்டிருந்தன.

(ஆ) வாடகை

----------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டில் அறவிட வேண்டிய ரூபா 5,604,635 தொகையான சந்தைக் கடையறை வாடகையில் 77 சதவீதம் அதாவது ரூபா 4,313,128 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,291,506 தொகை அறவிட வேண்டிய மீதியாக காணப்பட்டிருந்தது. மேலும், இத்தொகையினுள் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 11,799,171 தொகையினை வாடகைதாரர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் அறவிட வேண்டிய ரூபா 18,479,292 தொகையான இறைச்சிக்கடை வாடகையில் 85 சதவீதம் அதாவது ரூபா 15,638,396 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,840,896 தொகை அறவிடவேண்டிய மீதியாக காணப்பட்டிருந்தது. மேலும், இத்தொகையினுள் 2017 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட ரூபா 1,105,120 தொகை 12 வாடகைதாரர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய பொதுச் சந்தை குத்தகை ரூபா 3,518,430 தொகையாக காணப்பட்டிருந்ததுடன், இதில் ரூபா 1,017,080 தொகை 05 வருடங்களுக்கு மேலாக வாடகைதாரர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டியதாக காணப்பட்டிருந்தது.

(இ) வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம்

----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டில் சபையின் அதிகார பிரதேசத்தில் வருடாந்த வியாபார அனுமதிப் பத்திரங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட 1,100 கடைகளில் மீளாய்வாண்டில் 1,074 கடைகளுக்கான வியாபார அனுமதிப் பத்திரங்கள் வழங்கி ரூபா 1,925,800 தொகை வருமானம் பெறப்பட்டிருந்ததுடன், கடந்த வருடங்களில் சுமார் 125 கடைகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படாத கடைகள் தொடர்பில் ஆராய்ந்து தண்டப்பணம் அறவிடுவதற்கு அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வியாபார உரிமைக்கட்டணம் மற்றும் வியாபாரச்சான்றிதழ் வழங்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் பதிவேடுகள் முறையாக பேணப்பட்டு வருடாந்த சுருக்கங்கள் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் அறவிடவேண்டிய வியாபார நிலையங்களின் விபரங்கள் இனங்காணப்பட்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 முத்திரைக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் காணி கொடுக்கல் வாங்கல் மீதான முத்திரைக் கட்டணங்கள் மீளளிப்பு கோரல் தொடர்பில் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயத்திற்கும், தண்டப்பணங்கள் மீளளிப்பு செய்ய கோரும் விண்ணப்பம் நீதிவான்/ மாவட்ட நீதிமன்றங்களின் பதிவாளக்கும் அனுப்பப்பட வேண்டியிருந்தும், சபையினால் 2021 ஆம் ஆண்டு யூலை தொடக்கம் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் வரையான 18 மாதங்களுக்குரிய முத்திரைக் கட்டணங்கள் கோரி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் 2017 தொடக்கம் 2021 யூன் வரையிலான காலப்பகுதிக்கு பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் தொடர்பில் சபை அனுப்பிய தொகைக்கும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட தொகைக்கும் இடையில் ரூபா 1,447,898 தொகையான வேறுபாடுகள் காணப்பட்டிருந்தும், அத்தொகைகளினை சரியான முறையில் இனங்கண்டு சபைக்கு வருமானமாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரைக்குமான காலப்பகுதிகளில் நடமாடும் சேவைகள் மூலம் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 120 காணி உரிமையாளர்களிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்டிருந்த ரூபா 7,411,812 பெறுமதியான முத்திரைத் தீர்வைகளினை மாகாண சபையின் தலைமை செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரகளிடமிருந்தும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொது மக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகியன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) துணைச் சட்டம்

பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபை பொது மக்களிற்கு வழங்க வேண்டிய காணி மற்றும் ஆதனம், வீதிகள் மற்றும் பாதைகள் போன்ற சேவைகளை வழங்குவதற்கு துணைச் சட்டங்கள் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பொதுமக்களிடமிருந்து நாளாந்தம் பெற்றுக்கொள்ளும் திண்மக்கழிவுகளை அட்டாளைச்சேனை பிரதேச சபை திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தற்கு வழங்கப்படுகின்றது. அவ்வாறு வழங்கப்படும் ஒரு டொன் உக்கக்கூடிய கழிவிற்கு ரூபா 200 மற்றும் உக்காத கழிவிற்கு ரூபா 300 தொகையும் செலுத்தப்பட்டு வருவதுடன், மீளாய்வாண்டின் போது சபையினால் தரம்பிரிக்காது கொட்டப்பட்டுவரும் ஒவ்வொரு டொன் உக்கக்கூடிய கழிவுகளுக்கு ரூபா 100 படி மேலதிகமாக செலுத்தியிருந்தது.

(ii) சபையினால் மீளாய்வாண்டில் திண்மக்கழிவுகளை அட்டாளைச்சேனை அஷ்ரப் நகரிற்கு அனுப்புவதற்கு போதியளவான வாகன வசதிகள் சபையில் காணப்பட்டிராத காரணத்தினால் இறக்காமம் பிரதேச சபைக்குச் சொந்தமான வாகனமொன்றினை வாடகைக்கு அமர்த்தி வருடமொன்றிற்கு ரூபா 735,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம்

1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமாணங்கங்களுக்கிணங்க அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய 140 தொழில் நிறுவனங்கள் காணப்பட்டிருந்தும் அதில் 26 தொழில் நிறுவனங்களின் காலாவதியான அனுமதிப் பத்திரங்களினை புதுப்பிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் வரவு செலவுத்திட்டத்தில் பிரதேச சபை எல்லையினுள் வசிக்கின்ற விதவைப்பெண்கள், வறுமை கோட்டுக்கு கீழ் வாழ்கின்ற குடும்பங்கள், இளைஞர் யுவதிகள் போன்றோர்களை பொருளாதார, சமுக ரீதியில் வலுவூட்டுவதற்காக ரூபா 4,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும், அதன் மூலம் அரசின் நிலையான அபிவிருத்தி இலக்கினை அடைந்து கொள்வதற்கான நிலைபேறான அபிவிருத்தி குறிகாட்டிகளை உருவாக்கி அளவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பாதீட்டினைத் தயாரிக்கும் போது, தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் 2018 யூலை 17 ஆந் திகதிய 4/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த குறிகாட்டிகளுக்கிணங்க தரவுகளை சேகரிக்கும் நடைமுறையொன்று காணப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2021 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் - 19 மற்றும் மீளாய்வாண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணங்களினால் திறந்த பொதுச்சந்தை, இறைச்சிக்கடை மற்றும் கடை வாடகை நிலுவை வருமானத்தினை பதிவழிப்பதற்கு ஆளுனரிடமிருந்து ரூபா 9,100,054 தொகை மீளாய்வாண்டின் போது அனுமதி கிடைக்கப்பட்டிருந்தும், சபையினால் ரூபா 3,105,238 தொகை மாத்திரம் பதிவழிப்பு செய்யப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டிற்கான வாடகை நிலுவை ரூபா 5,994,816 தொகையினால் நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் வியாபார உரிமைக்கட்டணம் அறவிடுவதற்கு மதிப்பிடப்பட்ட கடைகள் மற்றும் அறவிடப்பட்ட கடைகள் தொடர்பில் ஆராய்ந்து சபையின் அதிகார எல்லையினுள் காணப்படும் கடைகளின் உண்மையான எண்ணிக்கையினை பெற்றுக்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் அறவிடப்பட்ட வருமானத்திற்குமிடையே ரூபா 1,588,545 தொகையான வேறுபாடுகள் காணப்பட்டிருந்தன.

(இ) 2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரைக்கும் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த அசைவற்ற ஆதன அலகுகளினை அடிப்படையாகக் கொண்டு சபையினால் ஆதன வரி அறவீடுகள் மேற்கொள்ளப்படாமல் அதற்கு குறைவான ஆதன அலகுகளின் மீதே வரி அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதனால் கடந்த ஐந்து வருடங்களில் ரூபா 10,582,996 தொகையான வருமான இழப்பு சபைக்கு ஏற்பட்டிருந்தன.

(ஈ) சபையின் அதிகாரப் பிரிவிற்குட்பட்ட 05 வட்டாரங்களிலுள்ள 44 ஆதனங்களின் பதிவேட்டிலுள்ள உரிமையாளர்களின் பெயர்களினை புதிய ஆதன உரிமையாளர்களின் பெயர்களுக்கு மாற்றுவதற்கு செயற்திறன்மிக்க பொறிமுறையொன்றினை சபையினால் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையினால் அவ் ஆதன உரிமையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 213,284 ஆதனவரி நிலுவையினை அறவிடுவதில் பாரிய சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளன.

(உ) சபையினால் மீளாய்வாண்டில் பொது மக்களிடமிருந்து அறவிடப்படும் கழிவுகள், கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் ஏனைய வியாபார நிலையங்களில் அறவிடப்படும் கழிவுகள் போன்றவற்றிற்கு அறவிடப்படும் திண்மக்கழிவகற்றல் கட்டணம் தொடர்பில் எவ்வித பதிவேடுகளும் பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், சபையின் ஊழியரொருவரால் அக்கட்டணம் அறவிடப்பட்டு வருவதுடன், மக்களிடமிருந்து அறவிடப்பட்ட பணம் மாத்திரம் வருமானமாக பதியப்பட்டிருந்ததுடன், நிலுவைத் தொகைகள், அறவிடவேண்டியவர்களின் விபரம் மற்றும் அறவிடவேண்டிய ஆண்டுகள் தொடர்பில் எவ்வித தகவல்களும் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையினால் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கும் திண்மக்கழிவகற்றல் சேவைக்காக வருடமொன்றிற்கு சமுர்த்தி பெறும் குடும்பமொன்றிற்கு ரூபா 360 படி 1,889 குடும்பங்களுக்கும், சமுர்த்தியல்லாத ஏனைய குடும்பமொன்றிற்கு வருடமொன்றிற்கு ரூபா 600 படி 2,296 குடும்பங்களுக்கும் இரு வேறுபட்ட

தொகைகளில் அறவிடப்படுகின்ற போதிலும், சபையின் வருடாந்தம் அறவிடப்படும் வருமானங்களின் மதிப்பீட்டுத் தொகைகளுக்கும் அறவீட்டுத் தொகைகளுக்குமிடையே ரூபா 1,451,552 தொகையான வேறுபாடுகள் காணப்பட்டிருந்தன.

(எ) சபையின் அதிகார எல்லையினுள் மேற்கொள்ளப்படும் கட்டிட நிர்மாண வேலைகளுக்கான அனுமதியானது தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபார்சு, பொதுச் சுகாதார வைத்திய அதிகாரியின்/ பொதுச் சுகாதார உத்தியோகத்தரின் சிபார்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் சிபார்சு என்ற நடைமுறைகளுக்கமைவாக அனுமதி வழங்கப்படுகின்ற போதிலும், திட்டமிடல் குழு கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் நகர அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர் கள விஜயம் மேற்கொண்டு ஆலோசனைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் 12 கட்டிட அனுமதிக்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு 1 தொடக்கம் 3 ஆண்டுகள் வரையான காலவீச்சில் அனுமதிக்கான காத்திருப்பு பட்டியலில் காணப்பட்டிருந்தன.

(ஏ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதி மற்றும் 1980 ஆம் ஆண்டின் நம்பிக்கை நிதி சட்டத்தின் பிரகாரம் நிதியத்திற்கான பங்களிப்பானது மாத மொத்த வேதனத்தில் குறிப்பிடப்பட்ட வீதங்களில் பங்களிப்பு செய்யப்படல் வேண்டும். எனினும், சபையின் பங்களிப்பானது பதிலீட்டு அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அமைய ஊழியர்களின் அடிப்படை வேதனத்தில் கணிப்பீடு செய்தமையால் மீளாய்வாண்டின் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புகள் முறையே ரூபா 2,149,284 தொகை மற்றும் ரூபா 322,397 தொகைகளும் குறைவாக பங்களிப்புச் செய்யப்பட்டிருந்தன.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதி வரை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து நீரிணைப்பினைப் பெற்றுக்கொள்வதற்காக சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 849 பயனாளிகளினால் வெட்டப்பட்ட கொங்கிரீட், மற்றும் தார் வீதிகளினை மீள்சீரமைப்பதற்காக ரூபா 1,255,000 தொகை வைப்பாக அறவிடப்பட்டிருந்தும், அவ் வீதிகள் கணக்காய்வுத் திகதி வரைக்கும் பயனாளிகளினால் மீள்சீரமைக்கப்பட்டு வைப்புத் தொகை மீளளிக்கவோ அல்லது அவ்நிதியை கொண்டு சபையினால் அவ் வீதிகளை மறுசீரமைக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்வுத் திகதியான 2023 ஏப்ரல் 18 ஆந் திகதி வரை சபையில் 27 பதவியணி வெற்றிடங்கள் காணப்பட்டிருந்த அதேவேளை 05 ஊழியர்கள் அனுமதிக்கப்பட்ட பதவியணிகளுக்கு மேலதிகமாக காணப்பட்டிருந்தும், சபையினால் அம் மேலதிகமாக காணப்படும் ஊழியர்களுக்கு பதிலாக வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கான ஊழியர்களை வருடாந்த இடமாற்ற நடைமுறையின் மூலம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்காக அனுமதிக்கப்பட்ட பதவிகளில் காணப்படும் பதவியணியினர்களுக்கு மேலதிகமாக தேவைப்படும் பதவியணியினர்கள் தொடர்பில் சபையினால் பதவியணி வெற்றிட எண்ணிக்கையில் மறுசீரமைப்பு மேற்கொண்டு போதியளவான ஊழியர்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் சபைச் செயற்பாடுகளை மேற்கொள்ள வெற்றிடமாகவுள்ள பதவியணிகளுக்கு பதிலீட்டு ஊழியர்கள் 85 பேர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டு சபை நிதியிலிருந்து வருடாந்தம் சராசரியாக ரூபா 34,137,289 செலவிடப்பட்டு வருகின்றன.

(இ) சபைக்கு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அனுமதிக்குப்பட்ட பதவியணியில் 29 வெற்றிடங்கள் காணப்பட்டிருந்த அதேவேளை சபையில் 05 மேலதிக ஊழியர்களும், 180 நாள் வேலைத்திட்டத்தில் 38 ஊழியர்களும் மற்றும் தற்காலிக ஊழியர் சேர்ப்பனவு 85 பேர் உள்ளடங்கலாக மொத்த பதவியணியில் 99 பேர் மேலதிகமாக சபையில் காணப்பட்டிருந்தனர். அவர்களை பொருத்தமான முறையில் வேலைப்பிரிப்பு செய்யப்பட்டு சபையின் வருமானப் பிரிவு மற்றும் திண்மக்கழிவகற்றல் பிரிவு போன்றவற்றிற்கு ஈடுபடுத்தி சபையின் வருமானம் மற்றும் திண்மக்கழிவகற்றல் செயற்பாட்டின் வினைத்திறனை அதிகரிக்க சபை தவறியிருந்தது.

(ஈ) சபையில் கடன் பெற்று இறந்த, ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் போன்ற காரணங்களினால் மீளாய்வாண்டில் 18 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கூட்டு மொத்தம் ரூபா 186,601 தொகையான கடன் நிலுவையினை உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்கள் ஏடுகளில் பதியப்படாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமானதும் மற்றும் சபையினால் பயன்படுத்தப்படும் 52 காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகளை உள்ளடக்கிய பதிவேடுகள் சபையினால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமானதும் மற்றும் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற 37 வாகனங்களின் பெறுமதிகளை உள்ளடக்கிய பதிவேடுகள் சபையினால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் செய்யப்படாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையில் காணப்படும் வாகனங்கள் மழை, வெள்ளம், வெயில் மற்றும் ஏனைய காரணங்களிலிருந்து பாதுகாப்பதற்கு போதுமானளவு கூரைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையினால், வாகனங்களின் உதிரிப்பாகங்கள் மற்றும் உடற்பாகங்கள் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டிருந்தன.

(ஆ) கைகாட்டி சிறுவர் விளையாட்டு பூங்காவில் காணப்படும் விளையாட்டு உபகரணங்களை வெயில் மற்றும் மழை போன்றவற்றிலிருந்து பாதுகாத்து அவற்றின் நீடித்த வாழ்தன்மையினை அதிகரிக்கும் நோக்குடன் பராமரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் எதிர்காலத்தில் அவைகள் முற்றாக சேதமடைவதற்கான சாத்தியங்கள் காணப்படுவதுடன், அப்பிரதேசத்தில் காணப்படும் சிறுவர்களுக்கான விளையாட்டு பூங்காவினை இழக்கவேண்டிய நிலையும் ஏற்படும்.

#### 3.4.3 பொறுப்பேற்கப்படாத சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) போக்குவரத்து சபையின் வேலைத்தள பயன்பாட்டிற்காக வாடகைக்கு வழங்கப்பட்ட மற்றும் இணைந்த கட்டிடத் தொகுதி உள்ளடங்கலாக 42.56 பேர்ச்சஸ் பரப்பினைக் கொண்ட காணியின் உரிமையினை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 128 இன் பிரகாரம், 20 வருடங்களுக்கு மேலாக அதனை சுவீகரித்துக் கொள்வதற்கு செயற்திறன்மிக்க மற்றும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் பயன்படுத்தப்பட்டுவரும் 06 வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.4 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

பெண்கள் வலுவூட்டல் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் வளத்தாப்பிட்டி பொதுச் சந்தை தொகுதியினை ரூபா 218,568 செலவில் திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும், புதிய மின் இணைப்பு, நீர் இணைப்பு மற்றும் மலசலகூட வசதிகளின்றி வியாபார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியாமல் காணப்பட்டிருந்தது.

## 3.5 பெறுகை

### 3.5.1 பெறுகை முகாமைத்துவம்

தேசிய பெறுகை வழிகாட்டியின் பிரிவு 4.2.1 இன் பிரகாரம் மற்றும் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் 2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டமானது பிரதேச சபையினால் வழங்கல்கள் மற்றும் சேவைகள் செயற்பாடுகளுக்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் மீளாய்வாண்டில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் கொள்வனவு செய்யப்பட்டு மேலதிகமாக ரூபா 76,395 வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 3.6 ஒப்பந்த நிர்வாகம்

மீளாய்வாண்டில் சென்னல் கிராமம் - 1 அல் ஹம்றா - 07 ஆம் வீதி ரூபா 942,995 செலவில் புனரமைக்கப்பட்டிருந்த வீதியானது பள்ளம், கல் மற்றும் மணல் மேடுகளாக காணப்படும் அதேவேளை, வீதிகளுக்கிடையிலான ஏற்ற இறக்கங்களை சமப்படுத்தி வீதியின் இரு ஓரங்களிலும் கிறவலிட்டு மட்டப்படுத்தப்படாமையினால் இவ் வீதியினை பயன்படுத்தும் பாதைசாரிகளுக்கும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கும் விபத்துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றன.

# 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 30 ஆம் பிரிவு மற்றும் நி.பி. 133(1) பிரகாரம் உள்ளகக் கணக்காய்வின் மூலம் நிறுவன செயற்பாட்டு நடைமுறையை மேம்படுத்தல் மற்றும் செயலாற்றலை உயர்த்துவதற்காக பரிந்துரைகளை தயாரித்திருக்கவில்லை.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்**

முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை.

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக